செ.வெ.எண்-25 நாள்-17.04.2019

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி, 18.04.2019 அன்று நடைபெறவிருக்கின்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2019 அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 27-சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் பதிவு செய்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) ஆகியவைகளை வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்வில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

27-சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்த வாக்காளர்கள் 14,79,108 உள்ளனர். மொத்த வாக்குச்சாவடி மையங்கள் 1708 உள்ளது. அவற்றில் 201 பதற்றமான வாக்குச்சாவடிகள் உள்ளது. மொத்த வாக்குச்சாவடி மையங்களை 144 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு தேர்தல் பணிக்காக 6,912 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2121 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 2232 வாக்காளர் தாம் பதிவு செய்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளும் (VVPAT) அனுப்பப்பட்டுளளன. தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 3259 காவலர்களும் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்தளம், உதவியாளருடன் கூடிய சக்கர நாற்காலி வசதி, பார்வை குறைபாடு உடையவர் வாக்களிக்க தன்னுடன் ஓர் உதவியாளரை அழைத்து செல்லும் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கும், மூத்த குடிமக்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வாக்களிப்பதில் முன்னுரிமையும், ஆண், பெண் வாக்காளர்களுக்கென தனித்தனி வரிசைகள் அமைக்கப்படும். இவ்வரிசையில் வரும் வாக்காளர்களில் ஒரு ஆண் வாக்காளர் வாக்களிக்க அனுமதிக்கப்படும்போது, இரண்டு பெண் வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். எனவே வாக்காளர்கள் எந்தவொரு அச்சமின்றி வாக்களிக்க அனைத்து வகையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** தெரிவித்துள்ளார்கள்.

முன்னதாக, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டார்கள்.

பின்னர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொட்டக்கொல்லை, விளந்தை, கொடுக்கூர் ஆகிய பகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்களையும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொன்பரப்பி பகுதியிலுள்ள வாக்குச்சாவடி மையத்தினையும் பார்வையிட்டு, தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்களிடம் அனைத்து பொருட்களும் சரியாக வந்துள்ளனவா என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், கோட்டாட்சியர்கள் நா.சத்தியநாராயணன் (அரியலூர்), ஜோதி (உடையார்பாளையம்), வட்டாட்சியர்கள் கதிரவன், குமரய்யா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.ஜெயஅருள்பதி, மண்டல அலுவலர்கள், தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினர் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்**